# அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
# ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624


அ.எண் : 81/2017

தேதி : 02/09/2017

**நீட் தேர்வால் தற்கொலை செய்துகொண்ட அனிதாவின் உடலுக்கு**

**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின்**
**சார்பில் அஞ்சலி.**

அரியலூர் மாவட்டத்தை சேர்ந்த அனிதா என்ற மாணவி பிளஸ்-2 தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்றும், கால அவகாசம் இன்றி புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட நீட் தேர்வு முறை அடிப்படையில், மருத்துவ கல்லூரி சேர்க்கையில் இடம் கிடைக்காத அதிர்ச்சியில் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் அதிர்ச்சி அளிப்பதாகவும், கவலை அளிப்பதாகவும் உள்ளது. உச்சநீதிமன்றம் வரை சென்று போராடிய அந்த வீர பெண்மணிக்கு, சமத்துவ மக்கள் கட்சியின் தலைவர் புரட்சித்திலகம் அவர்கள் வெளியூரில் இருப்பதால் நேரில் வந்து அஞ்சலி செலுத்த முடியவில்லை என்ற வருத்தத்தை பதிவு செய்துகொள்கிறேன்.

இந்த இரங்கல் நிகழ்ச்சியில், சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில், பெரம்பலூர் மாவட்ட செயலாளர் சின்னசாமி, திருச்சி மாநகர் கிழக்கு மாவட்ட செயலாளர் முரளிதரன், திருச்சி மாநகர் மேற்கு மாவட்ட செயலாளர் குணசேகரன், திருச்சி புறநகர் மாவட்ட செயலாளர் முரளிகிருஷ்ணன், தஞ்சை வடக்கு மாவட்ட செயலாளர் ராஜாராமன் ஆகியோரின் தலைமையில், சமத்துவ மக்கள் கட்சியின் நிர்வாகிகள், தோழர்கள் அனைவரும், தற்கொலை செய்துகொண்ட அனிதாவின் உடலுக்கு நேரில் சென்று அஞ்சலி செலுத்தி வீரவணக்கம் செலுத்துவார்கள் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏ.என்.சுந்தரேசன்
மாநில பொருளாளர்


எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com